செய்தி வெளியீடு எண்:101 நாள்: 21.02.2017

# செய்தி வெளியீடு

இன்று (21.02.2017) சென்னை சேப்பாக்கம், எழிலகம் கூட்டரங்கில் மாவட்ட வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்களுடன் மாநில அளவிலான கலந்தாய்வுக்கூட்டம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் 1.11.16 முதல் தேசிய உணவு பாதுகாப்பு சட்டம்–2013 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. **இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்ட, உலகம் போற்றும் உன்னத திட்டமான விலையில்லா அரிசி வழங்கும் திட்டமும் தொடரும், இத்திட்டத்திற்கு எவ்வித இடையூறும் இல்லாமல் கூடுதல் பயன்களுடன் உணவு பாதுகாப்பு சட்டமும் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் பெருமிதத்துடன் கூறினார்.** இத்திட்டத்தின் முழு பயன்களும் உரியவர்களை சென்றடைய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது நம் அனைவரின் தலையாய கடமையாகும் என்று தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிட்டவாறு, தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக, 1.4.2017 முதல் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார். இன்று வரை, 5 கோடியே 65 இலட்சத்து 30 ஆயிரத்து 672 குடும்ப உறுப்பினர்கள்

தங்களது ஆதார் அட்டை விவரங்களை குடும்ப அட்டையுடன் இணைத்துள்ளனர். இது தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 80 சதவீதமாகும். மீதமுள்ள குடும்ப உறுப்பினர்களின் ஆதார் விவரங்களை உடனடியாக பெற்று அங்காடிகளில் உள்ள விற்பனை இயந்திரத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதுவரை 18 இலட்சத்து 54 ஆயிரத்து 700 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தயாராக உள்ள 29 ஆயிரத்து 815 குடும்ப அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இன்று வரை, 5 இலட்சத்து 41 ஆயிரத்து 540 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமையன்று நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், இன்று வரை, 5 இலட்சத்து 77 ஆயிரத்து 053 மனுக்கள் பெறப்பட்டு, 5 இலட்சத்து 55 ஆயிரத்து 781 மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு காணப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் மட்டும்தான் இவ்வகை முகாம்கள் நடத்தப்படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில், கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் ஓட்டுநர்கள் மட்டுமல்லாது கடத்தலுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் துணை போகும் நபர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக, உணவு பொருள் கடத்தல் தடுப்பு காவல் துறையினரால் எடுக்கப்பட்டு வரும் கடுமையான தொடர்

நடவடிக்கைகளால் இதுவரை **951** நபர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் **(**BM ACT) கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக அரசு எடுத்து வரும், விலைக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினால் அத்தியாவசிய பொருட்களின் விலை வெளிச்சந்தையில் வெகுவாக குறைந்து வருகிறது என்று மத்திய அரசு பாராட்டியுள்ளது. வெளிச்சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலையை தொடர்ந்து கண்காணித்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் Dr.கே.கோபால், இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப்புலனாய்வுத் துறை இயக்குநர் முனைவர்.கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திருமதி.எஸ்.மதுமதி, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.9**